**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110251

1. District : Tiruvannamalai மாவட்டம் PS: V&AC Tiruvannamalai காவல்நிலையம் Detachment Year: 2020 ஆண்டு FIR No.: 03/2020 மு.த.அ. எண் Date: 05/03/2020 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: 1988 as amended by PC Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 26/02/2020 Date to : நாள் வரை 03.03.2020
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.03.2020 Time : நேரம் 1900 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Tiruvannamalai Town Crime Police Station, 3 Km South
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. A. Ashok (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Annamalai
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1984 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Mason & Coolie (g) Address : முகவரி No. 301, Rajarajan Street, Tiruvannamalai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) AO-1 Tr. Elanchezhiyan, Sub Inspector of Police
AO-2 Tr. Anbalagan, Sub Inspector of Police, Tiruvannamalai Town Crime Police Station, Tiruvannamalai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

By Complainant

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 5.3.2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 5.3.2020

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
05.03.2020 at 09.30hrs

Name: பெயர் G. MYTHILY
Rank: நிலை ...................No. எண் .........
Inspector of Police
Vigilance and Anti Corruption
Tiruvannamalai.

**<u>பணிந்து அனுப்பப்படுகிறது</u>:-** திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் 04.03.2020-ஆம் தேதி மாலை 19.00 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, திரு.A.அசோக், த/பெ அண்ணாமலை, எண்.301, இராஜராஜன் தெரு, திருவண்ணாமலை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: விடுநர் திரு.A.அசோக், த/பெ அண்ணாமலை, எண்.301, இராஜராஜன் தெரு, திருவண்ணாமலை பெறுநர், உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. அய்யா, பொருள்:- எனது மாமியார் திருமதி.கிருஷ்ணவேனி என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்யாமல் இருக்க ரூ.5000/- இலஞ்சமாக கேட்ட உதவி ஆய்வாளர்கள் திரு.இளஞ்செழியன் மற்றும் திரு.அன்பழகன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க கோருவது சம்மந்தமாக. நான் மேற்கண்ட முகவரியில் என் மனைவி ஜெயசுதா மற்றும் 3 பெண் பிள்ளைகளுடன் வசித்து வருகிறேன். நான் 7-ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் இதற்கு முன்பு எனது தந்தையார் திரு.அண்ணாமலை என்பவருடன் கட்டிடம் கட்டும் மேஸ்திரி வேலை செய்து வந்தேன். தற்போது சுமார் 3 மாத காலமாக எனது மாமியார் திருமதி.கிருஷ்ணவேனி க/பெ லேட் கிருஷ்ணன் என்பவருக்கு உதவியாக திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயிலில் இராஜகோபுரம் அருகில் பக்தர்களின் பொருட்களை பாதுகாக்கும் அறையில் வேலை செய்து வருகிறேன். எனது மாமியார் திருமதி.கிருஷ்ணவேனி என்பவர் சுமார் 30 ஆண்டுகாலமாக அருணாச்சலேஸ்வரர் கோயிலில் பணிபுரிந்து வருகிறார். தற்போது அவர் இராஜகோபுரம் அருகில் உள்ள பக்தர்களின் பொருட்கள், பைகள் ஆகியவற்றை பாதுகாக்கும் இடத்தில் பணிபுரிந்து வருகிறார். அதற்கு மாத சம்பளமாக எனது மாமியாருக்கு ரூ.7000/- கோயில் நிர்வாகம் சார்பாக வழங்கப்படுகிறது. கடந்த 25.02.2020-ஆம் தேதி ஒரு நபர் கொம்பு கைப்பிடி போட்ட பை மற்றும் தோளில் மாட்டியிருந்த பை இரண்டையும் பொருட்கள் பாதுகாப்பு அறையில் எனது மாமியாரிடம் கொடுத்துவிட்டு டோக்கன் பெற்று சென்றிருக்கிறார். பின்னர் சிறிது நேரம் கழித்து அந்த நபர் வந்து டோக்கனை திருப்பி கொடுத்துவிட்டு மேற்படி பைகளை பெறும் போது தனது மற்றொரு பையை காணவில்லை அதில் லேப்டாப் வைத்திருந்ததாகவும், தனது லேப்டாப்பை திரும்ப ஒப்படையுங்கள் என கேட்டுள்ளார். அதற்கு எனது மாமியார் அதைப்பற்றியெல்லாம் எனக்கு தெரியாது. லேப்டாப், செல்போன் போன்ற விலை உயர்ந்த பொருட்களை பாதுகாப்பு அறையில் பார்த்துக்கொள்ள கொடுக்கக்கூடாது என ஏற்கனவே நாங்கள் ஒரு அட்டையில் எல்லோருக்கும் தெரியும்படி எழுதி வைத்துள்ளோம் என்றும் ஏன் அதை மீறி உங்கள் லேப்டாப்பை பாதுகாப்பு அறையில் வைத்துக்கொள்ள கொடுத்தீர்கள் என கேட்டுள்ளார்.

இதுசம்மந்தமாக அந்த நபர் திருவண்ணாமலை நகர குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் என் மாமியார் மீது புகார் மனுவை கொடுத்துள்ளார். அந்த புகார் மனு சம்மந்தமாக எனது மாமியார் கடந்த 26.02.2020-ஆம் தேதி விசாரணைக்கு சென்றுள்ளார். விசாரணையில் திருவண்ணாமலை நகர குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் பணிபுரியும் உதவி ஆய்வாளர்கள் திரு.இளஞ்செழியன், திரு.அன்பழகன் ஆகிய இருவரும் லேப்டாப் காணாமல் போனது சம்மந்தமாக வழக்கு போடாமல் இருக்க எனது மாமியாரிடம் ரூ.25,000/- இலஞ்சமாக பணம் கேட்டு கட்டாயப்படுத்தியுள்ளனர். உடனே அன்றைய தினம் எனது மாமியார் தெரிந்தவரிடம் கடன் வாங்கி ரூ.15,000/-த்தை உதவி ஆய்வாளர் திரு.இளஞ்செழியன் என்பவரிடம் கொடுத்துள்ளார். அப்போது மீதமுள்ள ரூ.10,000/-த்தை இன்னும் இரண்டு நாட்களில் கொடுக்குமாறு திரு.இளஞ்செழியன் என்பவர் கேட்டுள்ளார். நான் கடந்த 24.02.2020-ஆம் தேதி இராமேஸ்வரம் கோயிலுக்கு சென்றுவிட்டு 27.02.2020-ஆம் தேதி இரவு திருவண்ணாமலைக்கு திரும்பி வந்தேன். எனது மாமியார் என்னிடம் நடந்த சம்பவத்தை கூறினார். நான் கடந்த 28.02.2020-ஆம் தேதி காலை திருவண்ணாமலை நகர குற்றப்பிரிவு காவல் நிலையத்திற்கு சென்று உதவி ஆய்வாளர் திரு.அன்பழகன் என்பவரை சந்தித்து விவரம் கேட்டேன். அதற்கு அவர் உனது மாமியார் திருமதி.கிருஷ்ணவேனி மீது இந்த சம்பவம் தொடர்பாக வழக்கு பதியாமல் இருக்க ரூ.15,000/- ஏற்கனவே கொடுத்துள்ளார்கள், அதில் மீதம் ரூ.10,000/- இலஞ்சமாக கொடுக்குமாறு கேட்டார். நான் அதற்கு அவரிடம் எனது மாமியார் ஏற்கனவே கொடுத்த பணம் ரூ.15,000/-த்தை கடன் வாங்கித்தான் கொடுத்தார். எனவே மேலும் ரூ.10,000/-த்தை எனது மாமியாரால் கொடுக்க முடியாது என்று கூறினேன். சிறிது நேரம் கழித்து அவர் என்னிடம் அப்படியென்றால் ரூ.5000/- கொடு என குறைத்துக்கேட்டார். நான் ஏற்பாடு செய்கிறேன் என கூறிவிட்டு திரும்பி வந்துவிட்டேன். நான் 03.03.2020-ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு திருவண்ணாமலை நகர குற்றப்பிரிவு காவல் நிலையத்திற்கு சென்று உதவி ஆய்வாளர் திரு.அன்பழகன் என்பவரை சந்தித்து ரூ.5000/-த்தை குறைத்துக்கூறும்படி கேட்டேன். அப்போது அங்கிருந்த உதவி ஆய்வாளர் திரு.இளஞ்செழியன் அவர்கள் ஏற்கனவே கேட்டபடி ரூ.5000/-த்தை கொடுத்துவிட்டு செல்லுமாறும், அவ்வாறு இல்லையென்றால் உன் மாமியார் மீது வழக்கு போடுவோம் என்று திட்டவட்டமாக கூறிவிட்டார். எனக்கும் எனது மாமியாருக்கும் பணம் ரூ.5000/- இலஞ்சமாக கொடுக்க விருப்பம் இல்லை. எனது மாமியார் பயந்த சுபாவம் என்பதாலும், பெண் என்பதால் கூச்சமாக உள்ளது என்று கூறியதாலும், அவரால் புகார் கொடுக்க இயலவில்லை என்பதால் நான் எனது மாமியார் மீது குற்ற வழக்கு பதிவு செய்யாமல் இருக்க என் மாமியாரிடமும், என்னிடமும் இலஞ்சமாக பணம் ரூ.5000/- கேட்ட

உதவி ஆய்வாளர்கள் திரு.இளஞ்செழியன் மற்றும் திரு.அன்பழகன் என்பவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க தெரிந்த நபர் மூலம் தட்டச்சு செய்த புகார் மனுவை இன்று 04.03.2020-ஆம் தேதி மாலை 7 மணிக்கு திருவண்ணாமலை காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிற்கு வந்து என் மாமியார் சார்பாக புகார் மனு அளிக்கிறேன். நான் அவசர வேலையாக சென்றதால் என்னால் உடனடியாக புகார் கொடுக்க முடியவில்லை. எனவே நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, SD/XXX 4.3.2020. (A.Ashok).

Sir,

Received the complaint on 04.03.2020 at 19.00 hrs and a quick verification on the general reputation of the accused was made and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the complainant was also checked and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 05.03.2020 at 07.00 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr. No. 03/2020 u/s. 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018. The FIR in original along with the complaint was sent to Hon'ble CJM and Special Judge, Tiruvannamalai and sent the copies to the officers concerned. Sd/-xxxxxx 5.3.2020 (G.MYTHILY) Inspector of Police, Vigilance and Anti-Corruption, Tiruvannamalai.

5.3.2020

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Tiruvannamalai.